தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 கடகம் (31-7-1989/15-8-89) ஓர் உருபா (இதழ் எண்: 126)

மதுரைச் சிறையில் சிறையாளிகள் உண்ணா நோன்பு வெற்றி பெற்றது!

காவல் துறை அதிகாரி தவறுகப் பேசி விட்டு மன்னிப்புக் கேட்டார்!

போராளிகளின் வெற்றி, அதிகாரிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்!

கடந்த 22-7-89 அன்று மதுரை நடுவண் சிறையில் உள்ள கலையரங்கில் காஞ்சி, காமகோடி பீடத் தலைவர், செயந்திரனின் பிறந்த நாள், சட்டத்திற்குப் புறம்பாகக் கொண்டாடப் பட்டுள்ளது. ஒரு மதத் தலைவரின் பிறந்த நாள் விழாவைச் சிறைக்குள் கொண்டாடிபது முதல் தவறு. ஏசு, புத்தர், காந்தி போன்றோரின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடுவது வேறு. ஆனால், பச்சையாகத் தம்மை இந்து மதத் தலைவரெனக் கூறிக் கொண்டு உயிரோடு உலாவந்து கொண்டிருக்கும் ஒரு மடத்தலைவரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவது என்பது வேறு. மேலும் அவர் தலைவராக உள்ள சங்கர மதம் இந்து மதத்தின் ஒரு கூறே! அதுவே முழுமையான இந்துமதம் அன்று. இனி, ஏசுவும் புத்தரும் மதத் தலைவர்கள் அல்லர். அவர்களின் கொள்கைகள் மதங்கள் அல்ல. அக் கொள்கைகள் ஒழுக்க நெறிகளாகவும் உலக மக்களுக்கே பொதுவானவையாகவும் உள்ளன. எனவே, அவர்கள் எல்லாருமே மதச்சார்பின்றிக் கொண்டாடுகின்றனர். ஆனால், காஞ்சி மடத் தலைவர் அப்படிப்பட்டவர் அல்லர். பார்ப்பன இனத்துக்கு மட்டுமே தலைவர் ஆவார். எனவே, அவர்கள் மட்டுமே அவரைக் கொண்டாடுகின்றனர். வேறு இனத்தவர்கள்—குறிப்பாகத் தமிழ் இனத்தவர்களில் அரசியல் சார்புள்ள ஒரு சிலர் அவரைக் கொண்டாடுகின்றனர் எனில், அது வெறும் பெருமைக்காகவும், அப் பார்ப்பன இன மக்களை நிறைவு செய்து தேர்தலில் ஒப்போலை பெறுவதற்காகவுமே என்று அறிதல் வேண்டும்.

மேலும், காஞ்சி மடத்தலைவராக உள்ள செயேந்திரனும் சரி, அவரின் மூத்த பெரியவரும்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க

சட்டத்திற்குப் புறம்பாகக் காவல் அதிகாரி பேச்சு! போராளிகள் கண்டனம்; சாகும்வரை உண்ணுநோன்பு!

மதுரை நடுவண் சிறையில் 'சன கல்யாண்' என்ற இந்துமத அமைப்பின் சார்பாக 22-7-89 அன்று காஞ்சி சங்கராச்சாரி செயந்திரன் பிறந்த நாள் விழா நடைபெற்றது. அதில் மாவட்டக் காவல்துறை அதிகாரி (டி.எஸ். பி.) வாசு கணபதி, அரசு ஊழியரின் மத விழாக்களில் கலந்து கொள்ளக் கூடாது என்கிற நெறி இருக்க, அந்த நெறியையும் மதிக்காமல், காவல்துறை சீருடையுடன் கலந்து கொண்டதல்லாமல், அவ்விழா பொதுவான மத விழாவான நிலையில் அம் மத நிலைக்கு உட்பட்ட கருத்துகளைப் பற்றிப் பேசாமல் தேவையற்ற கீழ்காணும் கருத்துகளைப் பற்றிப் பேசியுள்ளார்.

அவை பின்வருமாறு:

1. 'ஆட்டோ' சங்கர் வழக்கில் தலைதாழ்ந்த தமிழகக் காவல்துறை, மதுரை வங்கிக் கொள்ளை வழக்கில் மேடுதட்டியது. அந்நிகழ்ச்சியால் தலை நிமிர்ந்த நிலையில் இருப்போரில் நானும் ஒருவன். அதாவது 'ஆட்டோ' சங்கர் வழக்கில் தொடர்புடைய சில காவல் துறை உயர் அதிகாரிகளால், களங்கம் அடைந்ததால் வெட்கித் தலை குனிந்து, எனது தலையைக் கூட வெளியில் காட்ட முடியாதபடியான நிலையில் இருந்த போது, மதுரை வங்கிக் கொள்ளை வழக்கைப் புலனாய்வு செய்ததன் மூலம் எனது துறைக்கு ஏற்பட்ட களங்கத்தை நான் துடைத்தேன்.

2. அன்று பாரதியோ வெள்ளைத் திருடர்களை விரட்டுவதற்கு மீசை வைத்தான். இன்று நானோ நாட்டிலுள்ள கறுப்புக் கொள்ளையர்களை விரட்டுவதற்கு முறுக்கிய மீசை வைத்துள்ளேன்.

3. புத்தரும் நானும் பலவகைகளில் ஒருமைப் படுகிறோம். புத்தருக்கும் ஒரு மனைவி; எனக்கும் ஒரு மனைவி. புத்தருக்கும் ஆண் மகவு; எனக்கும் ஆண் மகவு. ஆனால் புத்தரைவிட உயர்ந்தவன் நான். காரணம் புத்தன் தன் மனைவியையும், குழந்தையையும் நடு இரவில் விட்டுச் சென்ற கோழை; ஆனால் நானோ என் மனைவியையும், குழந்தையையும் காப்பாற்ற இவ்வுலகில் போராடும் வீரன்.

4. பாரதியும், நானும் பலவகைகளில் ஒருமைப் படுகிறோம். பாரதி மதுரைக்குத் தெற்கே எட்டயபுரத்தில் பிறந்து கல்விக்காக மதுரைக்கு வடக்கே சென்று தொழிலுக்காக மதுரையில் இடம் கொண்டான். நானும் மதுரைக்குத் தெற்கே அருப்புக் கோட்டையில் பிறந்து, கல்விக்காக மதுரைக்கு வடக்கே சென்று தொழிலுக்காக மதுரையில் நடுவம் கொண்டவன். பாரதி தமிழ் மொழியை சின்னவீடு 'செட்டப்' ஆக வைத்திருந்தான். நானும் அதைச் சின்ன வீடு 'செட்டப்' செய்ய முயற்சி செய்கிறேன்.

இவ்வாறு பேசியது மதுரை வங்கிக் கொள்ளைத் தொடர்பாகப் பொய் வழக்குப் போட்டுத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உசாவல் குற்றவாளிகளாக உள்ளவர்களையும், மற்ற சிறையாளிகளையும் புண்படுத்துவதோடு, உயர் அதிகாரிகளை இழிவாகப் பேசி, அவமானப் படுத்துவதாகவும் இருந்தது. மேலும், அவர் கீழ்க்காணும் வகையில் அரசு நன்னடத்தை நெறிகளை மதியாமல் செயல்பட்டிருக்கிறார்.

1. அரசு அதிகாரிகள் மத விழாக்களில் பங்கேற்கக்கூடாது என்ற நெறியை மீறி உள்ளார்.

2. காவல்துறையைச் சார்ந்தவர்கள் சிறைவளாகத்திற்குள் நுழையக் கூடாது என்ற நெறியை மீறியுள்ளார்.

3. அதிலும், இவர் காவல்துறைச் சீருடையுடன் கலந்து கொண்ட தவறையும் செய்துள்ளார்.

4. 'ஆட்டோ' சங்கர் வழக்கு உசாவல் முடியாத நிலையிலும், மதுரை வங்கிக் கொள்ளைத் தொடர்பாகப் பொய் வழக்குப் போட்டவர்கள் உசாவல் குற்றவாளிகளாக இச் சிறையில் உள்ளார்கள் என்று நன்கு தெரிந்தும், (இவர் மதுரை வங்கிக் கொள்ளை வழக்கில் உசாவல் அதிகாரியாக அமர்த்தப் பட்டுள்ளார்) திட்டமிட்டு வெளியிலிருந்து எழுதிக் கொண்டு வந்து அவர்களைப் புண்படுத்தும் நோக்கத்தோடு அவர்களைப் பற்றி அவதூறாகப் பேசியுள்ளார். இதன் மூலம் வழக்கில் உசாவல் அதிகாரியாக அமர்த்தப் பட்டுள்ள அவர்; அவ்வழக்கு அறமன்றத்தில் உசாவலுக்கு உட்படுத்தித் தீர்ப்பளிக்காத சூழ்நிலையில் தவறாகப் பேசுவதோ, பொது மேடைகளில் அவதூறாகப் பேசுவதோ கூடாது என்ற நெறியையும் மீறியுள்ளார்.

5. புத்தரைப் பற்றி இழிவாகப் பேசியது அவர் இந்துமத வெறி கொண்டு பிற மதத்தினரைத் தாக்குவதாக இருந்தது.

6. தமிழ்மொழியை(தாய் மொழியை)ச் "சின்னவீடு 'செட்அப்'", என்று கூறியது தமிழ் மொழி உணர்வுடையவர்களைப் புண்படுத்துவதாக இருந்தது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

சரி, அவ்வப்பொழுது வாயாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துகின்ற உரைகள், எழுத்துகள் முழுவதும் பச்சைப் பார்ப்பனச் சார்பும் வேத மதக் கொள்கைகளுமே கொண்டவை. வேத மதம் என்பது வருணாச்சிரமத்தை வலியுறுத்தும் மனு(அ)தர்ம நூலை அடிப்படையாகக் கொண்டது. வருணாச்சிரமம் என்பதும் மனு(அ)தர்ம நூலும் உலக மக்களைப் பிறப்பாலும் நிறத்தாலும் வேறு பிரிக்கும் சாதி வெறியையும் நிற வெறியையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே அவர்களின் கொள்கைகள் உலக மக்கள் அனைவர்க்கும் உகந்தவை அல்ல. பார்ப்பனர்க்கே உகந்தவை; சார்பானவை; அவர்களுக்கே நலம் தருபவை; அவர்களைத் தெய்வம் என்ற அளவில் உயர்த்திப் பேசிப் பிற இன மக்களைத் தாழ்ந்தவர்கள், இழி மக்கள் என்று கருதச் செய்பவை. எனவே, தன்மானமற்ற, பகுத்தறிவற்ற, மதமூடர்களும், அடிமை உணர்வுள்ளவர்களும் தவிர, மற்றவர்கள் எவரும் அக் கொள்கைகளையோ, அவற்றைப் பரப்பி வரும் காஞ்சி சங்கராச்சாரியான்களையோ, பாராட்டுவதில்லை. சங்கர மடங்கள் காசி, பூரி முதலிய வடநாட்டு இடங்களில் இருந்தாலும், அவற்றில் உள்ள சங்கராச்சாரிகளும் இவர்களைப் போலவே இருந்தாலும், இத் தென்னாட்டுக் காஞ்சியில் உள்ள சங்கராச்சாரிகள் மூவரும் முழுமையான பச்சைப் பார்ப்பனக் கொள்கையாளர்கள்; தமிழினப் பகைவர்கள். அதிலும் காஞ்சியில் உள்ள இடைத்தர சங்கராச்சாரியாக உள்ள செயேந்திரன் என்பவர் தம்மைக் கடவுளாகவே எண்ணி இறுமாப்பாகவும் பார்ப்பனச் செருக்குடனும் நடந்து கொள்ளும் மனக் கோளாறு உடையவர். எனவே இவர் பிறந்த நாளை எத்தகைய பொதுவிடங்களிலும் கொண்டாடுவது என்பது பெரிய குற்றமான நடவடிக்கையாகும். அதுவும நலிந்தவர்களும், துயருற்ற மன நிலையுள்ளவர்களும், நிறைந்த சிறைச்சாலையில் கொண்டாடுவது மிகக் கொடுமையானதும், பொது மக்கள் நலம் கெடுப்பதும் ஆகும். இவ்விழாவைக் கொண்டாடச் செய்த அந்தச் சிறையதிகாரி யார் என்று தெரிந்து அரசு தக்க நடவடிக்கை எடுப்பதுடன், இனிமேல் அவ்வாறு கொண்டாடாதவாறு கண்டித்து எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்து, அந்த விழாவில், மதுரை, திருப்பரங்குன்றம் காவல்துறைக் கண்காணிப்பாளர். திரு. வாசு கணபதி எனபவர், தம் சீருடையுடன் வந்து, சிறையாளிகளிடையே சொற்பொழிவு செய்துள்ளார். அச் சொற்பொழிவில் வாய்த்துடுக்காகவும், மூடத்தனமாகவும் அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்துகள், அங்கிருந்த சிறையாளிகளை மட்டுமல்லாமல், வெளியிலுள்ள பொதுநல உணர்வாளர்களுக்கும் பெரும் மனக் கொதிப்பை ஏற்படுத்துவனவாகும். (அவர் வெளிப்படுத்தியுள்ள தவறான, இழிவான கருத்துகளையும், அவற்றால் ஏற்பட்ட விளைவையும், செய்தியாக இவ்விதழின் இரண்டாம் பக்கத்தில் வெளியிட்டுள்ளோம்).

திரு. வாசு கணபதி, தாம் ஒரு மாவட்டத் துணைக் காவல். அதிகாரியாக இருந்து கொண்டு இது போலும் மத விழாவில் கலந்து கொண்டது முதல் குற்றம். அதுவும், சீருடையில் கலந்து கொண்டது இரண்டாவது குற்றம். அத்துடன், 'ஆட்டோ' சங்கரைப் போராளிகளுடன் தொடர்புபடுத்தி அவர்களிடையே பேசியது அவரின் அதிகாரச் செருக்கைக் காட்டியிருக்கின்றது. அதோடு, இழிவான செயலுக்கும் சிறப்பான செயலுக்கும் வேறுபாடு தெரியாத அவரின் அறியாமையைப் புலப்படுத்தியுள்ளது.

அடுத்து, அவர் தம்மைப் பாரதியாருக்கும், புத்தருக்கும் இணை வைத்துப் பேசியதும், புத்தரை விடச் செயலால் தாம் உயர்ந்தவர் என்று கூறியிருப்பதும்; அவர் ஒரு கிறுக்கர் என்பதைப் புலப்படுத்தியிருக்கின்றன.

இனி, இவை எல்லாவற்றுக்கும் மேல், நம் இனிய செந்தமிழாம் தாய்மொழியைச் 'சின்னவீடு' என 'வைப்பாட்டி'த் தன்மைக்குத் தாழ்த்திப் பேசியது, அவர் தாயையே இழிவு படுத்திக் கொண்ட மூளைக் கோளாறு உடையவராக அவரைக் காட்டுகிறது. எனவே, இது கேட்டு, 'தமிழைப் பழித்தவனை, என் தாய் தடுத்தாலும் விடேன்' என்று பாவேந்தர் கூறியதற்கொப்ப, அங்கிருந்த தேசியப் பாதுகாப்புச் சட்டச் சிறையாளிகளும், தன்மானமும் பகுத்தறிவும், தாய்மொழிப் பற்றுக் கொண்டவர்களும் ஆகிய, பொழிலன், முகிலன் (தமிழ் நாடு இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள்), பழனி (முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்தவர்), அசந்த், பிரிண்டோ (ஈழப் போராளிகள்), விசி, குமரேசன், ஆனந்த் (சனநாயக சக்திகள்) ஆகியோர், அக் காவல்துறை அதிகாரிக்கு எழுத்து வழியாக, அவர் பேசிய கருத்துகளுக்காக 25-7-89 க்குள் மன்னிப்புத் தெரிவிக்க வேண்டுமென்றும், தவறினால் தாங்கள் 26-7-89 காலை முதல் சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொள்ளப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதுபோல், அவர் குறிப்பிட்ட நாளைக்குள் மன்னிப்புக் கேட்காமற் போகவே, இவ்விளைஞர்கள் 26-7-89 முதல் 30-7-89 வரை 5 நாள்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டிருந்தனர். இதுபற்றி எந்தச் செய்தித் தாளிலும் செய்திகள் வெளிவராமல் அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். ஆனாலும்,

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

சேலம் இரும்பாலையின் இரும்புப் பிடிகள்!

புலவர் அறிவுடை நம்பி

ஒரு நாட்டில் சிறு தொழில்களும், பெருந்தொழில்களும் வளரும் அளவிற்கு அந்நாட்டு மக்களின் வேலைக்கான ஏந்துகள் பெருகும்; பொருளியல் முன்னேற்றம் ஏற்படும். இது அனைத்து நாடுகளுக்கும் பொதுவான, இயல்பான நெறிமுறை. ஆனல், இந்தியா என்னும் வல்லாளுமையில் பிணிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் நிலையோ முற்றிலும் மாறு பட்டுள்ளது. சேலம் இரும்பு வரலாற்றுக் காலந்தொட்டே சிறப்புப் பெற்றது. அங்கு ஒரு பெரிய இரும்பாலை தொடங்க வேண்டும் என்று பல நாள்கள் டெல்லிக்குக் காவடி தூக்கி, ஒப்புதல் பெற்றனர். பல ஆண்டுகள் கிடப்பில் கிடந்த பின்னர் செயல்படத் தொடங்கியது.கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிய கதையாகப் பெரிய இரும்பாலை என்பது போய், உருட்டாலை என்ற பெயரில், அவ்வாலையைக் கட்டும் பொறுப்பு வடநாட்டுப் பணமுதலைகளின் குழுமம ஒன்றிடம் ஒப்படைக்கப் பட்டது. அவன் அவனுடைய ஆட்களேயே கொண்டு வந்து பணிகளைத் தொடங்கினான். அதனல் அந்தப் பகுதியில் வாழ்ந்த ஏழை உழைப்பாளிகளுக்கு எவ்வகைப் பயனும் கிட்டவில்லை. தன்னுடைய மண்ணில், தனது வீட்டிற்கு அருகில் பல்லாயிரக் கணக்கானோர் பணியாற்றும் படியான பணிகள் நடந்தும், அம்மண்ணின் மைந்தர்களுக்கு எப் பயனும் இல்லை. இவன் பட்டினியாகவே கிடக்க வேண்டிய நிலைதான்; எங்கோ இருந்து வந்தவன் ஊதியம் பெற்றுச் சென்றான்.

அவ்வாலை கட்டி முடித்த பின்னர், தொழில் நுட்ப வல்லுநர்கள், கொழுத்த ஊதியத்தில் பணி அமர்த்தம் பெற்றனர். அதிலாவது தமிழனுக்கு இடம் கிடைத்ததா? அதுவும் இல்லை.

தமிழன் உலகெங்கும் சென்று தமது அறிவாற்றலை நிலைப்படுத்தி வருகிறான். ஆனல் தமிழ் நாட்டில் உள்ள சேலம் இரும்பு உருட்டாலைக்குப் போதிய தொழில் நுட்ப வல்லுநர்கள் கிடைக்க வில்லை; கொழுத்த ஊதியம் கிடைக்கக் கூடிய இப்பணிகளில், முகாமையான பொறுப்புகளிலிருந்து அனைத்துமே பிற மாநிலத்தவர்களே நிரம்பியுள்ளனராம். ஒரு சிலரும் கூடத் தமிழர்களாக இல்லை என்பது எவ்வளவு மனவெதும்பலான வெட்கக் கேடான செய்தி. இதைத் தமிழ் நாட்டில் வாழும் தேசிய நீரோட்டத்தில் மூழ்கித் தன்மானமிழந்து, கோடரிக் காம்புகளாக வாழும் கொள்ளைக் கும்பல்கள் அறியுமா? அறியாதது மட்டுமன்று. பார்! பார்! சேலம் இரும்பாலை பார்!! அங்கு எவ்வளவு பேருக்கு வேலை பார்!' என்றன்றோ முழுங்குகின்றனர். எவ்வளவு பேருக்கு வேலை என்பது உண்மைதான், அங்கு வேலை செய்வோர் யார்; இவையெல்லாம் முழுகிப் போன முண்டங்களுக்குப் புரியுமா? புரிய வைக்க வேண்டாமா?

அங்குள்ள இன்னும் கொடுமையான செயல் என்னவென்ருல் வாயில் காவலனுக இருக்கக் கூடத் தமிழன் தகுதி இல்லாதவன் என நிலை நிறுத்தப்பட்டுள்ளதுதான். தமிழ்நாட்டில் உள்ள நிறுவனம்; தமிழர்தாம் அங்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை ஏற்படும்; அதுவும் ஏழை எளிய மக்கள் சிறு காரணங்களுக்காக வேணும் செய்ய வேண்டி நிலை ஏற்படலாம்; ஆனல் அங்கு வாயில் காவலர்களாக இருப்போர் தமிழ் தெரியாத இந்தியோ, உருதுவோ பேசக் கூடிய வேற்று மொழியினர். மேலும் அங்குப் பணியாற்றக் கூடியவர்களுக்கு எடுபிடி வேலை செய்ய, வேறு சில வகையான பழுது பார்க்கும் பணிகள் வண்ணம் பூசுதல், கொத்து வேலை போன்ற சிறு அளவில் நடை பெறும் வேலைகளுக்குத் தமிழ்த் தொழிலாளர்கள் ஒரு சிலர், சிறுசிறு ஒப்பந்தக் காரர்கள் மிகச் சிலர், தற்பொழுது பணியாற்றி வருகின்றனர். ஆனல், அங்குப் பணியாற்றும் ஆளுமை வெறியர்கள் அவர்களை மாந்தர்களாகவே நினைப்பதில்லையாம். ஏதோ நிலத்தில் ஊறித் திரிகின்ற புழு பூச்சிகளைப் போல எண்ணி நடத்துகின்றனராம். அப்படிப்பட்ட ஒருவரிடம் உசாவிய போது "வேறு பிழைப்பிற்கு வழியில்லையே என்று தான் இங்கு இவர்களிடம் வேலை செய்கிறோம்" என்று மிகத் துயரத்துடன் கூறினார். அவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள். உயர்நிலையில் உள்ள அந்தப் பேர்வழிகள் எத்தகைய சிறு உதவியும் செய்ய மறுத்து விடுவார்களாம். இதுதான் தமிழ் நாட்டில் உள்ள தொழிலகத்தில், தமிழனுக்குக் கிடைக்கின்ற, மதிப்பு, பொருள்வளம்! இப்படியெல்லாம் அடிக்கின்ற கொள்ளை, நமக்குப் பயன் படுகிறதா? அது நேராக தில்லிக்குப் போய் விடுகிறது. இவ்வாருகத் தமிழ்நாட்டில் நடைபெறும் தொழிற்சாலையில் தமிழனுக்கு வேலையில்லை. இன்னும் சொன்னல் தமிழர்கள் காவல்காரர்களாக இருக்கக் கூட அருகதையில்லை. அதில் வரும் வருமானமும் தமிழ்நாட்டிற்கில்லை. எப்படி வளர்ச்சி? இப்படிப்பட்ட வளர்ச்சியைத் தருகின்ற நாட்டு ஒருமைப்பாடு, அனைத்திந்திய நீரோட்டம், வேற்றுமையில் ஒற்றுமை, இந்தியன் என்ற உணர்வு-இவை எல்லாம் தேவைதாமா? ஏ! தன்மானமிழந்த, தரங்கெட்ட, கொத்தடிமைக் கைக் கூலிகளே! கோடரிக் காம்புகளே! வடவனுக்கு வாலாட்டிப் பிழைக்கும் ஞமலிக் கணங்களே? எச்சில் இலைக்காகக் காத்து நிற்கும் விலங்கைப் போன்று,

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(தொடர்: 9) (முன் இதழ்த் தொடர்ச்சி)

குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும்!

-செ. அமிழ்தன்-

இவ்வாறு தமிழ்த் தேசிய முதலாளிய இயக்கத்தை அழித்து முன் வைக்கப்பட்ட கூட்டுத் தீர்வுரிமையே தமிழர்களைத் திராவிட(ர்) இயக்கங்களாகவும், இந்திய(ர்) இயக்கங்களாவும் மாற்றியது. அதன் வழி இந்தி(ய) வல்லரசுக்கும் தமிழகத்தை அடிமை நாடாக்கியது. தற்போது இந்தி(ய)க் கூட்டுத் தீர்வுரிமையில்—அஃதாவது நாடாளுமன்றத்தில்—இவ்வியக்கங்களின் தனித் தன்மையைக் காத்துக் கொள்ள மாநிலத் தன்னுட்சி (மாநில சுயாட்சி)யையும் கோர வைத்துள்ளது. (மாநிலத் தன்னுட்சிக் கோரிக்கையானது தமிழர்களிலுள்ள குட்டி முதலாளிகளின்—தரகு முதலாளிகளின் தனியுரிமைகளைக் காப்பதற்கு என எழுந்த கோரிக்கையாகும். இக்குட்டி முதலாளிகள் இந்தி(ய)ப் பெரு முதலாளிகளால் தாங்கள் அழிக்கப் படுவதைத் தடுத்து நிறுத்த எழுப்பும் கோரிக்கையாகும். அதே நேரத்தில் தாங்களும் பெரு முதலாளிகளாக விரும்புவதை முன்னிறுத்தும் கோரிக்கையாகும்.)

எனவே "தமிழக விடுதலை" என்பது தமிழக மக்கள் (இந்தி(யர்) மற்றும் திராவிட(ர்) இருட்டடிப்புகளிலிருந்து மீள்வதும், அதே நேரத்தில் இந்தி(ய) ஆளும் வகுப்புகளை ஆட்சிகளிலிருந்து தூக்கியெறிவதும் என்னும் இரண்டு தன்மைகளை உள்ளடக்கிய போராட்டக் கொள்கையாக உள்ளது.

இந்நிலையில் நாம் முதன்மையாக எதிர்த்துப் போராட வேண்டியது இந்தி(யர்) இருட்டடிப்புகளையும், அதைக் கொண்டு வல்லாட்சி புரியும் தில்லி இந்தி(ய) அரசையுமே ஆகும். இக்கொடிய இந்தி(ய) நடுவணரசாக உள்ள தில்லியரசிடமிருந்து விடுபடுவதே தமிழர்களைத் திராவிட(ர்) மயக்க இருட்டடிப்புகளிலிருந்தும் விடுவிக்கும்;

எனவே இந்திய(ர்) இருட்டடிப்புகளையும், அவற்றை உள்ளடக்கி ஆளுகின்ற இந்தி(ய) வல்லரசையும் எதிர்த்துப் போராடும் நாம், இன்றைய உலக-இந்திய நடப்பியலுக்கு ஏற்பவே நமது போராட்ட நடைமுறைகளை வார்த்தெடுத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் நடப்பியலைப் புறந்தள்ளி விட்டுப் போராடுதல் இயலாது. அவ்வாறு போராடுவோமாயின் அது நம்மை அழித்துக் கொள்வதாகவே அமையும்.

இந்திய நடப்பியலும் தமிழக விடுதலைப் போராட்டமும்:

உலக அரங்கில் இந்திய அரசு தன்னை ஒரே நாட்டு அரசாகக் காட்டிக் கொண்டாலும், இந்திய நடப்பியலில்—இந்திய அரசியலமைப்பின் படி—அஃது ஒரு நாட்டரசோ அல்லது தனிப்பட்ட ஒரு நாட்டினத்தின் அரசோ அன்று. (Not a State of a separate Nation or a Nationality) மாறாக இந்தியாவிலுள்ள பல நாட்டினங்களை ஒருங்கிணைத்த ஒரு நடுவண் அரசே ஆகும். ஆக, தோற்றத்தில் ஒரு நாட்டின அரசாக—அதாவது இந்தியரின் அரசாக—தம்மை அறிவித்துக் கொண்டாலும், நடப்பியல் இந்தி(ய) நடுவண் அரசு பல நாட்டினங்களை (multi Nationalities) ஒடுக்கி—அவற்றின் உரிமைகளைக் குறுக்குவதும், பறிப்பதுமாக—ஆளும் ஒரு துணை வல்லரசாகவே இருந்து வருகின்றது. அது தன்னுடைய ஆளுமை வெறியை நிலை நாட்டிக் கொள்ளவே—பெரு முதலாளிகளின் சுரண்டல் வேட்டையைக் கட்டிக் காக்கவே—இந்தியாவிலுள்ள நாட்டினங்களுக்குரிய உரிமைகளை மறுத்து அவற்றைப் பகுதி பகுதிகளாகப் பிரித்து—அஃதாவது மாநிலங்களாகப் பகுத்து ஆண்டு வருகின்றது. இதுவே இந்திய நடப்பியல் (the reality of India) ஆகும்.

இத்தகைய வல்லரசாக உருப்பெற்றுள்ள தில்லி நடுவண் அரசில் இந்திய பலநாட்டின தரகு முதலாளிய வகுப்புகளே ஆளும் வகுப்பாக ஒருங்கு சேர்கின்றன. இவ்வாறு உருவாகும் ஆளும் வகுப்பின் வல்லாட்சியில் மாநிலங்களாகப் பிரிந்துள்ள பகுதிகளில் உள்ள குட்டி முதலாளிய அரசியல் தரகர்களே மாநில அரசுகளின் ஆளும் வகுப்புகளாக உருப் பெறுகின்றனர். இம்மாநில அரசுகளுக்குத் தனிச்சட்ட உரிமைகள் கிடையா. எனவே அவை இந்திய(ய) ஆளும் வகுப்புக்கும் அஃது உருவாக்கும் புதிய புதிய சட்டங்களுக்கும் கட்டுப்பட்டவையாகவே இருக்கின்றன. எனவே மாநில அரசுகள் யாவும் தில்லியரசின் சட்டங்களைச் செயற்படுத்தும் அமைப்புகளாகவும், தில்லியரசின் ஆளுமைக்கு அப்பகுதியில் உள்ள நாட்டினங்களின் உரிமைகளை அடகு வைத்துத் துணை போகும் தரகு அமைப்புகளாகவுமே இருக்கின்றன. இதுவே இந்திய நடப்பியலில் ஆளும்

வகுப்புகளின் (Ruling Class) தன்மையும், மக்களின் அரசியல் அதிகாரத்தின் நிலையும் ஆகும்.

ஆளும் வகுப்பின் தன்மையும், மக்களின் அரசியல் அதிகாரத்தின் நிலையும் இவ்வாறு உள்ள போது, தில்லியரசு உருவாக்கும் சட்டங்கள் அனைத்தும் ஒரு தனிப்பட்ட நாட்டினத்தின் ஆளுமைக்குரிய சட்டங்களாக இருத்தல் இயலாது. மாறாக அவை இந்தியாவிலுள்ள பல்நாட்டின பெரிய மற்றும் குட்டி முதலாளிய வகுப்புகளின் தனி யுரிமை) நலன்களை ஒருங்கே கட்டிக்காக்க எழுந்த வல்லரசின் வல்லாளுமைக்குரிய சட்டங்களாகவே இருக்க முடியும்.

இதனால் இந்திய அரங்கில் தில்லியரசையும், அதன் ஆளும் வகுப்பையும், எதிர்த்தெழும் போராட்டங்கள், உருவில் பல்வகைப் போராட்டங்களாக இருப்பினும், நடப்பியலின்படி அவை வல்லரசு எதிர்ப்புப் போராட்டங்களாகவே இருக்க முடியும். இவ்வகையில் தில்லி இந்தி(ய) வல்லரசை எதிர்த்துத் தமிழக மக்களின் தன் தீர்வு உரிமையைப் பெற வேண்டி எழும் தமிழக விடுதலைப் போராட்டம் ஒரு வல்லரசு எதிர்ப்புணர்வை உள்ளடக்கிய ஒரு போராட்டமாகவே இருக்க முடியும். அது தோற்றத்தில் தமிழர்களின் போராட்டமாக இருந்தாலும் நடப்பில் ஒரு வல்லரசு எதிர்ப்பு (an Anti Imperialist) போராட்டமே ஆகும்.

எனவே தமிழக மக்களின் தன் தீர்வு உரிமைக்காகவும், தமிழகத்தின் தனி நாட்டு உரிமைக்காகவும் போராடும் நாம், நம் போராட்ட நடைமுறைகளை வல்லரசு எதிர்ப்புத் தன்மைகளுக்கேற்பவே வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வளர்த்தெடுத்துக் கொள்ளும்போது நாம் நமது "தமிழக விடுதலை" என்னும் முழக்கத்துடன் பின்வரும் முழக்கங்களையும் இணைத்துப் போராட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும். இவ்வாறு இணைத்துப் போராட்டத்தை முன்னெடுத்தல் மட்டுமே தமிழக மக்கள் தங்கள் உண்மையான விடுதலையுரிமையைப் பெறுவதற்கு உதவியாக அமையும்.

இந்திய அரசே!

- **இந்தியாவிலுள்ள அனைத்து நாட்டினங்களுக்கும் தன்தீர்வு உரிமையை (சுய நிர்ணய உரிமையை) வழங்கு!**
- **அனைத்து மக்களுக்கும் எதிரான (விரோத) கருப்புச் சட்டங்களையும் உடனே திரும்பப் பெறு!**
- **இந்திய ஒருமைப் பாட்டின் போர் வெறிக் கொடுக்கை உடனே வெட்டியெறி!**
- **அனைத்து மக்கள் உரிமைச் சிக்கல்களுக்கும் உடனே தீர்வு காண்!**

இவையே நமது முழக்கம்!
இதுவே நமது போராட்டப் பாதை!
தவறுகளைக் களைந்தெறிவோம்
தமிழகத்தை விடுவிப்போம்!!
வாழ்க தமிழகம்!
வெல்க தமிழக மக்கள் விடுதலைப் புரட்சி!

(இக்கட்டுரை 1-9-88 அன்று தோழர் தமிழரசனுக்கு முதலாண்டு நினைவு வணக்கம் செலுத்து முகமாக "தமிழ்நாடு. மா-இலெ" அமைப்புக் குழு திட்டகுடியில் ஒழுங்கமைத்திருந்த சிறு கருத்தரங்கில் படித்த கட்டுரை)

(**இதழாசிரியர் குறிப்பு:** இக்கட்டுரைக் கருத்துகளைத் தெளிவு படுத்தியும் மாறாகவும் எழுதப்பெறும் கட்டுரைகள் வரவேற்கப் பெறுகின்றன.) O

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அவரின் தவறுகளைச் சுட்டிக்காட்டித் தாம் பேசியது தவறுதான் என்று வருத்தம் தெரிவிக்கக் கூறி 22-07-1989-ஆம் பக்கல் திரு. வாசு கணபதிக்கு நாங்கள் " எழுதிய மடலுக்கு 25-07-1989 மாலை வரை விடை மடலோ செய்தியோ வராததாலும் (அம் மடலில் 25-07-1989-க்குள் எந்தவித விடையும் வராவிட்டால் நாங்கள் 26-07-1989-அன்று காலையிலிருந்து "சாகும் வரை உண்ணாநோன்பு" இருப்பதோடு, இந்நிகழ்ச்சியை முதல்வர் வரைக் கொண்டு செல்வோம் என்று குறிப்பிட்டிருந்தது) அவர் அரசு ஊழியர் நன்னடத்தை நெறிகளை மேற்கண்ட முறைகளில் மீறி இருப்பதாலும், சிறையாளர் மனம் புண்படும்படி பேசியதாலும், அவர் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி தேசியப் பாதுகாப்புச் சட்டச் சிறையாளிகளான நாங்கள் 26-07-1989-அன்று காலையிலிருந்து அரசு நடவடிக்கை எடுக்கும் வரை உண்ணாநோன்பு இருப்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி. இப்படிக்கு

1. பழனி (முற்போக்கு இளைஞர் அணி), 2. அசந்த் 3. பிரின்டோ (ஈழப் போராளிகள்), 4. முகிலன், 5. பொழிலன் (தமிழ்நாடு இளைஞர் பேரவை), 6. விசி, 7 குமரேசன், 8. ஆனந்த் (சனநாயக சக்திகள்).

இதே படிகள் பார்வைக்கு

1. சட்ட அமைச்சர், தமிழ்நாடு அரசு,
2. காவல்துறை மாநிலத் தலைமை உள்நோட்டகர் (I.G.) சென்னை,
3. சிறைத்துறை மாநிலத்தலைமை உள்நோட்டகர் (I.G.) சென்னை,
4. காவல்துறைக் கண்காணிப்பாளர், மதுரை,
5. மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை,
6. மாவட்ட நடுவர், மதுரை,
7. சிறைக் கண்காணிப்பாளர், மதுரை,
8. செய்தித்தாள்கள், தமிழ்நாடு.

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம்!

இப்படியும் ஒரு வினு..:?

ஈழச் சிக்கல் இந்திய அரசியலில் புயலைக் கிளப்பிக் கொண்டுள்ளது. பிரேமதாசாவின் இடுக்கிப்பிடியில் இந்தியாவின் 'அகடம் பகடம்' செல்லுபடியாகுமா என்பது தெரியவில்லை. 'அமைதிப்படை' என்ற பெயரில் அட்டுழியப் படையாக மாறிவிட்டதென்ற குற்றச்சாட்டை மறுத்திட இயலவில்லை. ஒரு மணி நேரத் தாக்குதலுக்கு 'இலங்கை' தாங்குமா என்றவர்கள், 'முதுகில்' மண் ஒட்டவில்லை என்று பேசுகிறார்கள்.

'ஈழ விடுதலை' என்பது உறுதியாகி விட்டது. இதனை 'அந்த ஈழ மக்கள்' கட்டுப்பாட்டில் வைப்பதா 'இந்தியாவின்' பொம்மையரசாக்கி விடுவதா என்பதில்தான் 'சிக்கல்' எனலாம்!

இந்தியாவின் சார்பில் பேசுகிற பத்மநாபா, சபாரத்தினம் பிரிவுகளும் சரி, 'சுப்பிரமணிய சுவாமி' இங்கே போடுகிற 'கூக்குரலும்' சரி— 'ஈழ விடுதலை'யையே பேசுகின்றன.

'விடுதலைப் புலிகள்,' இந்தியாவிற்கு 'அடங்க' மறுக்கிறார்கள்—பிரேதாசாவுடன் கண்டிப்புக்கு ஆட்படாமல் பேச்சுரை தொடங்கியுள்ளார்கள்,—'சிங்கள'த் 'தீவிர'ங்களுடன் ஒத்துப் போகிறார்கள்-என்பதும், ஈழமே எங்கள் வேட்கை' என்ற அவர்களின் தொடர் முழக்கமும் காண்கிறோம்...

இந்த இருவேறு நிலைமைகளும், தனி ஈழம் அமைவதைத் தவிர்க்க முடியவிலலை என்பதையே காட்டுகின்றன...நாம் முதலில் கூறியுள்ளது போல்.. 'பொம்மை' ஈழம், உண்மை ஈழம் இவற்றில் எது? இதுவே நம் வினு?

உ.த.மு:க. தோழர்களே,!

1 உங்களைத் தமிழர் தேசிய இயக்கத்துடன் இணைத்துக் கொள்ள முயலுங்கள்...

2. தமிழின விடுதலைக் கழகத்துடன் கரைந்துக் கொள்க...

3. புதிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்காகப் போராடி அனைத்துத் தேசிய இனங்களின் உரிமைக்காகவும் நிற்கும் இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியோடு கலந்து நில்லுங்கள்.

4. இந்தி ஆதரவு மாநாடா? ஈழப் போராளிகளுக்கு எதிர் நடவடிக்கையா? தட்டிக் கேட்க ஓடிவரும் 'பன்னூட்டுத் தமிழுறவு மன்ற'த்துடன் சேர்ந்து நில்லுங்கள்...

5. ஆம்...'உ. த. மு.க.வின் தனித்தன்மை போய் விடுமே' என்ற கலக்கம் வேண்டாம்!

6. உறவுகளைப் புரிந்து கொள்ளப் போர்க் களப் பயிற்சியைப் பெற்றுத் தெளிய...'ஒல்லும் வகையெல்லாம்' முயலுங்கள்...

7. ஆயினும், 'நாம் உ. த. மு. க. தோழர்கள்' என்னும் உணர்ச்சி பெறுவோம்...

8. தமிழினப் பாட்டாளிகள் பிரிந்து கிடக்கிறார்கள்...புரிகிறது...அவர்களை இணைக்க ஒரு செயற்களம் அமைக்க முடியவில்லையா? அதிர்ந்து போதல் வேண்டாம்!

9. செயல்படுங்கள்...ஆனல், 'எங்கிருந்தாலும், உ.த.மு.க. எனும் ஒளிச்சுடர் நாம்' என்ற உறுதியை விட்டு விடாமல் வாழுங்கள்!

தமிழின இசைக் குழுக்கள்...!

மதுரையில் 'புரட்சிக் கவிஞர் பேரவை' அன்று 7-5-89 விழா எடுத்தது. கருத்தரங்கம், இசையரங்கம், பாட்டரங்கம், பட்டி மன்றம் நிகழ்ந்தன.

'படிப்பு வட்டம்' காந்தி அருங்காட்சியகம் அறையொன்றில் நடந்தது. அதில் எம். ஏ. நுஃமான் எழுதிய நூலை ஆராய்ந்தனர். மார்க்சியக் கலை பற்றிய திறனாய்வு நூல்களைத் திறனாய்வது நுஃமான் நூல்.

அனைத்துப் படைப்பிலும் கருத்துப்பரப்பல் (பிரச்சாரம்) இருக்கும் என்பது சரியன்று. 'செய்தி' வேறு, கருத்துப் பரப்பல் என்பது வேறு என்பதை விளங்கிக் கொள்ள முடிந்தது. அமெரிக்கன் கல்லூரியில் பணிபுரிந்த வீதி நாடகத் துறையில் வல்ல ஏ. இராமசாமி கட்டுரை மூலம் நுஃமானை-அவர் வழியாகக் கோ. கேசவனை, இரகுநாதனை அறிமுகம் செய்தார் எனலாம்!

கடலூர் மணிமாறன், அ. இறையன், க. சி. அகமுடைநம்பி, ஆ. பழனி, மு. இராமநாதன் போன்ற பலரையும் கண்டு பேச முடிந்தது, சூரிய தீபனையும் சந்தித்தேன்.

தி. க. பெரியவர் மா. ச. இராமசாமி அவர்கள் 'வளமார் திராவிட நாடு' என்ற பாட்டை இசையரங்கில் பாடகர் பாடியபோது, 'வளமார் தமிழர் நாடு' என்று பாடுவதுதான் சரி என்றார். பெரியாரின் தோழரான இவர், 'திராவிட' என்று கூறுதல்—பாடுதல் வேண்டாம் என்று கருதுகிறார் எனில், துணிவான இளைஞர் உள்ளம்—உண்மை காணும் உள்ளம் அவரிடமுள்ளது புலப்படும்!

"ஆளும் வகுப்பில்—'ஆங்கில வழிக் கல்வி'—பாடங்கள் வைத்துள்ளதைத் தமிழக அரசு நீக்குதல் வேண்டும்; தமிழ்வழிக் கல்விக்குத் தடையாகவுள்ள அத்தனைத் தன்மைகளையும் நீக்குதல் வேண்டும்'' என்று அப் பெரியவர் புகன்றார்!

பாரதிதாசன் பாடல்களையன்றிப் பாவலரேறு படைத்த இசைப் பாடல்களை மேடைகளில் பாடும்படி இசைவாணர்களைக் கேட்டுக் கொள்வோம்.

இனமானம், தமிழ் மணம் கமழும் பாடல்களைப் பாடிப்பரப்பிடும் இசைக் குழுக்கள் தோன்றுதல் வேண்டும்! O

Scanned with CamScanner

தமிழ் ஈழமும் வட இந்தியரும்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

வடஇந்திய அரசும், வடஇந்திய அரசு நடத்துகின்ற வானொலியும் (radio), வானொளியும் (television), 1987-ஆம் ஆண்டு சூலைத்திங்களில் இலங்கையரசுடன் வடஇந்திய அரசு செய்த இந்திய-இலங்கை உடன்பாடு (India-Sri Lanka accord of July 1987), ஈழத் தமிழரின் நலனைக் காக்கவே என்ற பொய்க் கருத்தை நாக் கூசாமல் பரப்பி வந்துள்ளன. ஈழ நாடு விடுதலை பெற்றுத் தமிழனுக்கென ஒரு நாடு ஏற்பட்டு விடக் கூடாதென்ற வடஇந்தியரின் **தமிழினப்பகைமை** உணர்வு காரணமாகவே, வடஇந்திய அரசு இந்திய-இலங்கை உடன்பாட்டை ஈழத் தமிழர் மீது திணித்ததென்ற உண்மையை மறைக்க முயன்றன. இதுவரையிலும், வடஇந்தியத் தாளிகைகள் உண்மை நிலைகளை மறைத்து, வடஇந்திய அரசின் பொய்களைத் தாமும் பரப்பி வந்தன. ஆனால் தற்போது, இந்தியப் படைகள் இலங்கையைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டுமெனச் சிங்கள அரசின் குடியரசுத் தலைவர் பிரமதாசா (Premadasa) கட்டளையிட்டதைக் கண்டு சினங்கொண்ட வடஇந்தியத் தாளிகைகள், சில உண்மைகளை வெளிப்படுத்துகின்றன, இந்திய — இலங்கை உடன்பாடும், இந்தியப் படை ஈழத்துக்குச் சென்றமையும் சிங்கள அரசுக்கு (சிரீ லங்கா அரசுக்கு) உதவி செய்திடவே என்ற உண்மையை இப்போது கூறுகின்றன. வடஇந்தியாவிலிருந்து வெளிவருகின்ற '**டைம்சு ஆப் இந்தியா**' (Times of India) என்ற ஆங்கில நாளிதழில் இவ்வாண்டு (1989) சூன் திங்களில் வெளியான கட்டுரையொன்று கீழ்வருமாறு கூறுகிறது.

"இந்திய-இலங்கை உடன்பாட்டிற்கு முன்னால் (1987 சூலைத் திங்களுக்கு முன்னால்) இலங்கையின் வடபகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழேயே இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கு விடுதலை பெற்ற ஈழ **நாடு ஏற்படுத்துவதை** இலங்கைப் படைகள் (சிரீலங்காப் படைகள்) தடுத்திருக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து இலங்கையின் வட பகுதியை மீண்டும் கைப்பற்ற வேண்டுமென்று கருதி, இலங்கையரசு 1987-இன் முதற் பகுதியில் நடத்திய படையெடுப்பு முயற்சிகள், **இலங்கைப் படையின் வலிமையின்மை** காரணமாகவே நிறுத்தப்பட்டன **என்பதை** இலங்கை (சிரீலங்கா) படைத் தலைவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்."

மேற்கண்ட கருத்தை மீண்டும் படித்துப் பாருங்கள். இந்திய அரசு 1987 சூலைத் திங்களில் இந்திய—இலங்கை உடன்பாட்டை ஈழத் தமிழர் மீது திணிக்கு முன்னால் இருந்த நிலைகளை மேற்கண்ட கருத்து தெள்ளென விளக்குகிறது. 1987-சூலைத் திங்களில் இருந்த நிலை இதுதான்.

1) இலங்கைத் தீவின் வடபகுதி (யாழ்ப்பாண நகரும், அதையொட்டிய பகுதிகள் யாவும்) தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் இருந்தது.

2) தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து, இலங்கைத் தீவின் வடபகுதியை மீண்டும் சிங்கள ஆட்சிக்குக் கொண்டு வரும் வலிமை அன்று சிங்களவப் படைகட்கு இல்லை.

3) அந்நிலையில், தம் கீழ் இருந்த இலங்கைத் தீவின் வடபகுதியைத் தமது தளமாக அமைத்துக் கொண்டு, இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியை விடுதலைப் புலிகள் படிப்படியாகக் கைப்பற்றி, முழுமையான தமிழ் ஈழத்தை அமைத்திருக்க முடியும். (நாட்டின் ஒரு பகுதியைப் பகைவனிடமிருந்து மீட்டு, அதனைத் தளமாக அமைத்து, நாட்டின் பிற பகுதிகளைப் படிப்படியாக விடுவிக்கும் போர் முறையை வரலாறு பலமுறை கண்டிருக்கிறது.)

4) இவ்வாறு ஈழ நாடு தமிழனுக்குத் கிடைத்து விடக் கூடாது என்ற **தமிழினப் பகைமை உணர்வு** காரணமாகவே, வடஇந்திய அரசு இந்திய—இலங்கை உடன்பாட்டை ஈழத் தமிழரின் மேல் திணித்தது.

5) அவ்வுடன்பாடு ஈழத் தமிழ் மக்களைக் காலங் காலமாய்ச் சிங்களவருக்கு அடிமைப் படுத்தி வைக்கும் என்பதை உணர்ந்த தமிழ்த்திரு வே. பிரபாகரனும், அவரோடு கைகோத்து நின்ற தந்நலமற்ற, தமிழின உணர்வோங்கிய, மற மாண்பு மிக்க தமிழீழ விடுதலைப் புலிகளும் அவ்வுடன் பாட்டை எதிர்க்கவே, அவர்களை ஒழித்துக் கட்டிவிட்டு, ஈழத் தமிழரைச் சிங்களவருக்கு நிலையாக அடிமைகளாக்கும் பணியில் இந்தியப் படைகள் ஏவப்பட்டன.

6) இந்தியப் படையால் கொல்லப்பட்ட ஈழத் தமிழ் மக்கள் ஐயாயிரத்துக்குமேல். கற்பழிக்கப் பட்ட தமிழ்ப் பெண்கள் சில நூற்றுவர். கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட தமிழ்ச் சொத்துகளின் மதிப்பு பல கோடி உருபா.

வடஇந்திய அரசு செய்யும் செயல்கள் அனைத்தும், தமிழனுக்கென ஒரு நாடு இலங்கைத் தீவில் உருவாகி விடக் கூடாது என்ற கருத்தின் பால் எழுந்தனவேயாகும். (வடஇந்திய அரியணை-

யில் அமர்ந்திருக்கும் இராசீவ் மட்டுமல்லர், வட இந்திய அரசியல் தலைவர் அத்தனைப் பேரும் (அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் சரி) ஈழ விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பதைத் தமிழினம் மறந்து விடலாகாது) ஈழத் தமிழ் மக்களின் நலனைக் கருதுவது போல, பல்வேறு நாடகங்கள் போட்டாலும், வட இந்திய அரசு செய்யும் செயல்கள் அனைத்தும் ஈழத் தமிழரை அடிமைகளாக வைத்திடும் நோக்கத்தின்பாற்பட்டதே என்பதை உணர்ந்திட முடியும்.

இந்தியப் படையை எவ்வகையிலாவது ஈழத்தை விட்டு வெளியேற்றுவதே ஈழ விடுதலையின் முதற்கட்டம். பின்னர், சிங்களப் படைகளை வெளியேற்றுவது ஈழ விடுதலையின் இரண்டாம் கட்டம். இந்த இரண்டு—கட்டப் போருக்குத் (two-stage war) தமிழகத் தமிழராகிய நாம் ஈழத் தமிழருக்குத் துணை நிற்போமாகுக.

ஒழிக• வட இந்திய, சிங்களவக் கொடுமைகள்!
வாழ்க தமிழ் ஈழம்!! O

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் இருப்பவன் போடும் எடுபிடி வேலை, என்னும் பதவி இரப்புக்காக(பிச்சைக்காக)ப் பல்லித்துத் திரியும் பதர்களே? இனமானமும், பொது நல நோக்கமும் சிறிதும் இன்றி வயிற்றை நிரப்ப எத்தகைய இழி செயலையும் செய்து திரிகின்ற விலங்குக் கும்பல்களே! சிந்தித்துப் பார்த்தீர்களா? இவ்வளவு கொடுமைகளுக்கும் காரணியமாக இருக்கின்ற கொடுமையாளர்களுக்குத் துணை போகின்றவர்களை இம்மண்ணின் மக்கள் மறந்து விடுவார்கள் என்று எண்ணுகிறீர்களா?

இது மட்டுமன்றி இன்னும் தமிழ்நாட்டில் அமைய வேண்டிய வண்ண நிழற்படச் சுருள் தொழிற்சாலை, வடக்கே போய் விட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் அதற்கான மூலப் பொருள் தென்னாட்டில் இருந்துதான் அங்கு போக வேண்டுமாம். இத்தகைய ஒருமைபாடு தேவை தானா? இம்மண்ணின் மொழி உணர்வு, பண்பாட்டுத் தனித்தன்மை இவற்றை அழிக்க எவ்வளவு கரவுத்தனமாக முனைப்போடு திட்டமிட்டுச் செயல் படுகிறது தில்லி அரசு? வெள்ளையன் அடிமையிலிருந்து மீண்டு வடவனுக்கு அடிமையாக வாழ்வதுதான் விடுதலை வாழ்வா? மேலும் அரசியல் அளவில் மாநிலக் கட்சிகள் வலுப் பெற்று விடக் கூடாது என்பதற்காக என்னென்ன தில்லுமல்லு வேலைகளெல்லாம் நடைபெறுகின்றன. ஆயிரம் உண்டிங்கு சிக்கல்; அதில் வடவன் தலையிடுவது என்ன ஞாயம்? “தஞ்சையில் கிடைக்கும் எண்ணெய் வளத்தில் தமிழ்நாடு பெறும் பயன் எவ்வளவு? தமிழ்நாட்டில் விளையும் கரும்புக்கும், நெல்லுக்கும், விலை மதிப்பிடுவது தில்லி, எப்படி வேடிக்கை? இவ்வாறு பல வகையிலும் சொந்த மண்ணிலேயே சுரண்டப்பட்டுக் கொத்தடிமைகளாய் வாழ்வதுதான், உரிமை வாழ்வா? இத்தகைய ஓர் இழிநிலைக்காகத்தான் விடுதலை வேண்டிப் பல்லாயிரம் பேர் அனைத்தையும் ஈகம் செய்து பாடு பட்டனரா? இவற்றைத் தமிழினத்தில் எத்தனைப் பேர் சிந்திக்கின்றனர்?

இவற்றையெல்லாம் மறந்துவிட்டுப் பொது நலன் என்ற பண்பையே மறந்து விட்டு, ஏதோ, இழிவு, வடவருக்குக் குற்றேவல் செய்யும் பதவி என்ற பெயருக்காகத்தான் மொழி இனம், நாடு அனைத்தையும் காட்டிக் கொடுக்க காலடி வைக்க இங்கு எவ்வளவு பேர் நான் நீ என்று முந்திக் கொண்டு வருகிறார்கள்! இவர்களல்லரோ இவ்வினத்தின் மிகப் பெரிய எதிரிகள். இத்தகையவர்களை இனங் கண்டு கொண்டு பொது வாழ்வில், அரசியல் வாழ்வில் அடிச்சுவடே இல்லாமல் செய்ய வேண்டாமா? அப்படிச் செய்யவில்லையானால் தமிழன் தன்மானத்தோடு வாழ முடியுமா? சேலம் இரும்பாலை என்ன, வேறு என்ன? ஆலைகள் வந்தும் தாம் என்ன? அதனால் தமிழகம் பயன் பெறப் போகிறதா?

நடுவணரசின் ஆளுமையில் உள்ள அனைத்துத் தொழிலகங்கள், அலுவலகங்கள் எங்கும் இதே நிலைதான். தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரும் வணிக நிலையங்களில் தமிழனுடையவை எத்தனை? பிற மாநிலத்தாருடையவை எத்தனை? தமிழின் அரிச்சுவடியே தெரியாமல், தமிழர் வரிப் பணத்தால் தமிழ் மண்ணில் நடக்கும் கல்விக் கூடங்களில், பல வகையான உயர் பட்டங்கள் வரை படிக்க முடியும். இத்தகைய கொடுமை வேறு மாநிலங்களில் உள்ளனவா? இத்தகைய பொதுவான சிக்கல்கள் உயிர்நிலை போன்ற சிக்கல்கள் எத்தனையோ இருக்க, அவற்றைக் களைய ஒன்றிணைந்து போராட வேண்டிய கால கட்டத்தில், வடவன் தன் வல்லாளுமையை நிலை நிறுத்த விரித்த வலையாகிய, சாதிப் போராட்டத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு தமிழனே ஒருவனை ஒருவன் அடித்துக் கொண்டும் தமிழ்நாட்டின் பொதுச் சொத்துக்களை அழிவு படுத்திக் கொண்டும் திரிகிறார்களே; இவர்களையெல்லாம் தீண்டத்தகாதவர்களாக மதிக்க வேண்டாமா?

சேலம் இரும்பாலை போன்று எத்தனை நிகழ்வுகள் இங்கு நடந்தாலும் இவர்கள் கண்டு கொள்ளப் போகிறார்களா? ஏ!! இளந்தமிழா? நீ எண்ணிப்பார்! உன்னுடைய திருக்கையிலும் மாசற்ற சிந்தனையிலும்தான் இத்திரு நாட்டின் மாட்சியும், விடுதலையும் அடங்கியிருக்கிறது. சேலத்தின் இரும்புப் பிடிகள் பொடிபட உள்ளன. O

நல்ல நூலிலிருந்து நல்ல செய்திகள்!

இந்தியப் பொருளியல்!

பேரா. தி. இராமதாசு, க.மு., மயிலாடுதுறை

இந்திய ஆட்சி, அதிகாரம் அத்தனையும் பார்ப்பனர் வல்லாளுமையிலும், வடநாடு பனியா-மார்வாரி, முல்தானி, டாட்டா, பிர்லா போன்ற இந்தியத் தேசிய தரகு முதலாளிகளின் கைகளுக்கும் சென்று விட்டது.

இவர்களுடைய சொத்துகள் ஒரு போட்டிக் கருப்புப் பண அரசு நடத்தும் அளவில் உள்ளன. மேலும், பல பன்னாட்டுத் தனிவுடைமை முதலாளிய வல்லாண்மை ஆற்றல்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, கூட்டுக் கொள்ளை அடிக்கிறார்கள். இதில் தமிழ்நாட்டு முதலாளிகளின் பங்கே துமில்லை. இருப்பவர்கள் தரகர்களே! பார்ப்பன முதலாளிகளின் பங்கே அதிகமாக உள்ளது.

மேலும் இந்தியப் பொருளியல், உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் (Basic and essential needs of the Society) அதற்கு அடிப்படையான வேளாண்மைத் துறையையும், உழவர்களின் நலன்களையும் புறக்கணித்து, இதற்கான முயற்சிகளில் முதலீடு செய்வதை விட்டுவிட்டு, இதற்கு மாறாக ஆடம்பரப் பொருள்கள் (Luxuries Things) தொலைக்காட்சி, குளிர்பதனப் பெட்டிகள், சொகுசு ஊர்திகள், போர்த் தளவாடங்கள், இரண்டு சக்கர வண்டிகள் முதலியவற்றில் மூல முதலீடு செய்து உள்ளனர்.

எனவே நாட்டில் உள்ள வருமானத்தில் 90 விழுக்காட்டை 10 விழுக்காடு உள்ள பார்ப்பன-வணிக (பனியா) முதலாளிப் பிரிவும், அரசு ஊழியர்களும்-பங்கு போட்டுக்கொண்டு, மீதமுள்ள 10 விழுக்காட்டு வருமானத்தை 90 விழுக்காட்டு அடித்தட்டு ஏழை, எளியவர்கள், பாட்டாளிகள், உழவர்கள் பங்கு போட்டுக் கொள்ள வேண்டியவர்களாக, ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தவிர, இன்றைய வரையில் உள்ள ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களும் அதன் அடிப்படையில் அமைந்து விட்ட காரணத்தால், ஏழை மேலும் மேலும் ஏழையாகி வாழ்விழந்து நிற்கிறான்...தேசிய வருமானத்தில் 70 விழுக்காடு வேளாண்மையிலிருந்து பெறப்படுவதைப் பார்க்கிறோம். நாட்டின் தொடர்ந்த பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தை ஈடு செய்வது வேளாண்மையே! வெளிநாட்டுச் செலாவணியை ஈடு செய்வதும் வேளாண்மையே! எனினும் வேளாண்மைக்குரிய பங்கை அரசு தருவதில்லை.

பன்னாட்டு முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு வேளாண்மை விளைச்சலுக்கு அடிப்படையாக உள்ள விதை, உரம், பூச்சி மருந்துகள் போன்றவற்றின் விலைகளும் உழவர்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் வேறு பயன்படு பொருள்களின் விலையும் மிகவும் அதிகமாகிக் கொண்டே செல்வதால், உழவு பயன் இல்லாத தொழிலாக அரசால் மாற்றப்பட்டு விட்டது.

கோடிக்கணக்காக வரி நிலுவை வைக்கும் முதலாளிகளை — திரைப்படக்காரர்களை இதுவரை சிறைப் படுத்தியதாகவோ, அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ததாகவோ குறிப்புகள், செய்திகள் இல்லை. ஆனால் மிகவும் எளிய தொகைக்காக உழவர்களை மிரட்டி, அவர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்யும் அவல நிலையில் உழவர்கள் வாழ்கின்றனர். காரணம் ஏர் பிடிப்பதே கரிசு (பாவம்) என்று கூறும் பார்ப்பனர் கையிலும், உழவு பற்றி அறியாத கொள்ளை வணிகர் கையிலும் அரசு சிக்கியுள்ளதே.

வேளாண்மை செய்பவர்களுக்கு வேலை இல்லை. மூன்று விளைச்சல், இரண்டு விளைச்சல் நிலங்களெல்லாம் ஒரு விளைச்சல் கூட வேளாண்மை செய்ய இயலாத அவல நிலையில் உள்ளன சாகுபடி செய்ய முடியாத நிலையில் வேளாண் மக்களுக்கு 60—70 நாள்கள் கூட வேலை இல்லை. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 120 நாள்கள் கூட அவர்களுக்கு உழவு வேலையில்லை. இந்த நிலை, தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில், 100 சிற்றூர் (கம்மங்)களில் ஆய்வு நடத்திய நடுவண் அரசின் புள்ளி விளத்தக் கணக்கில் தெரிய வந்த உண்மை. அவர்களில் ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு அதிகமாக உரு. 15 கூட கிடைப்பதில்லை. பெண்களுக்கோ அதுவும் குறைவு.

எனவே, தமிழ்நாட்டில் வாழும் மக்களில் 62 விழுக்காட்டு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். அஃதாவது மாதம் ஒன்றுக்கு உரு 56.64 மட்டுமே அவர்களது வருமானமாக உள்ளது...

இந்தியாவின் முதல் இருபது தொழில் முதலாளிகளில் ஒரே ஒரு தமிழன் — சிதம்பரம் — மட்டுமே 400 கோடி உருபா மூல முதல் கொண்டவராக உள்ளார். இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் தாழ்த்தப்பட்ட மிக மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்திலிருந்து தொழில் முதலாளியாக ஒருவர் கூட வரவில்லை என்பது ஆராய்வதற்குரிய ஒன்றாக உள்ளது. வடநாட்டு இந்திவெறிக் கொள்ளையர்கள் கைகளில் உருபா 40,000 கோடி சொத்து உள்ளது. மேலும் 32,000 கோடி உருபா கருப்புப் பணமாகப் புழங்குகிறது. இந்திய அரசோ தோட்டத்தில் பாதி கிணறு என்பதுபோல் துரைத்தனம் நடத்துகிறது.

— நூல். **யார் கொள்ளையர்கள்?**
வெளியீடு. தமிழ் இன விடுதலைக் கழகம்.
137. மகாதானத்தெரு, மயிலாடுதுறை.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளின் தொடர்ந்த உண்ணு நோன்பால், கலக்கமுற்ற சிறையதிகாரிகள், அந்தக் காவல்துறை அதிகாரியான வாசுகணபதியை அழைத்து 31-7-89 காலையில் போராளிகளிடம் மன்னிப்புக் கேட்கச் செய்திருக்கின்றனர். அதன் பின்னர் 31-7-89 பிற்பகல் முதல் போராளிகள் உண்ணு-நோன்பை முடித்துக் கொண்டனர்.

இதற்குள் இச் செய்தி உ.த.மு.க. அலுவலகத்திற்குத் தெரிய வரவே, கழக முதல்வர் **பாவலரேறு** அவர்களும், தமிழ்நெறிக் குடும்ப அமைப்பாளர் **இறைக்குருவனார்**. தமிழர் கழகத் தலைவர், வழக்கறிஞர் **சோதிப்பிரகாசம்**, குடும்பத் தலைவி **தாமரை பெருஞ்சித்திரனார்** ஆகியோரும் பிற இயக்கப் பொறுப்பாளர்கள் சிலரும், தில்லி, உச்ச நெறிமன்ற நடுவர், சென்னை உயர்நெறி மன்ற நடுவர், மதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை, சிறைத்துறைப் பொது நோட்டகர் (I. G. of Prisons), காவல்துறைப் பொது நோட்டகர் (I. G. of Police), மதுரை மாவட்டக் காவல்துறை அதிகாரி, மதுரை, நடுவண் சிறைக் கண்காணிப்பாளர், தமிழ்நாடு சட்ட அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் — ஆகியோர்க்கு, **''மதுரை, நடுவண் சிறைப் போராளிகள் எட்டுப் பேர்களும் மேற்கொண்டுள்ள சாகும் வரை உண்ணு நோன்புப் போராட்டத்தின் சிக்கலில் தலையிட்டு ஆவன செய்யுமாறும், அவர்களின் உயிருக்குப் பாதுகாப்புக் கொடுக்கு''**மாறும் தொலைவரி கொடுக்கப் பெற்றது.

இப்போராட்டத்தைப் பற்றித் தமிழகத் தலைநகரில் உள்ள அனைத்துச் செய்தித்தாள்களுக்கும் செய்தியறிக்கை அனுப்பப் பெற்றது. ஆனால், 'ஆட்டோ' சங்கர், திண்டுக்கல் 'சசிகலா' செய்திகளையும், திரைப்பட, நடிக, நடிகையர் சிற்றுசை பேராசைச் செய்திகளையும்,. சாராயக் கடைச் செய்திகளையும், பக்கம் பக்கமாகவும், வண்ணப் படங்களுடனும், வெளியிடுகின்ற செய்தித் தாள்கள், இப்போராளிகள், தமிழ்மொழிக்காகவும், மூடநம்பிக்கையை எதிர்த்தும் உண்ணு நோன்பிருந்து போராடும் முகாமைச் செய்தியை ஒரு சிறு அளவிலேனும் பொது மக்கள் தெரிந்து கொள்ள வெளிப்படுத்தவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதும் வெட்கப்படத் தக்கதும் ஆகும்.

இனி, அதற்கு மேல், இங்குள்ள, பொறுப்புள்ள ஓர் அரசு அதிகாரி, நம் தாய்மொழியாம் தமிழ்மொழியை வைபபாட்டி மொழி என்று இழிவு படப் பேசியதற்காக, இவ்வினமே வெட்கித் தலைகுனிதல் வேண்டும். தமிழர்களுக்கு இனியேனும் நல்லுணர்வு தோன்றுமா? எதிர்காலந்தான் விடை சொல்ல வேண்டும். O

கடன் சுமையால் திக்கித் திணறுகிறது, இந்தியா!

O இந்தியாவுக்குள்ள மொத்த கடன்
(20-12-84 இன்படி) 19,019.64 கோடி

85-ஆம் ஆண்டு வட்டி — 408.05 கோடி

முதலாகச் செலுத்த வேண்டிய தவணைத் தொகை
(ஓர் ஆண்டுக்கு) — 469-32 கோடி

O உள்நாட்டுக் கடன் : 74,000 கோடி

அரசிடம் தனி ஆள்கள், சில நிறுவனங்கள் ஒப்படைத்துள்ள கடன்கள் (சிறு சேமிப்பு, எய்ப்பில் வைப்புகள் (பிராவிடன் பண்டுகள்) முதலியன. — 36,000 கோடி

O எனவே, அரசின் மொத்த கடன்: — 1,11,000 கோடி
(ஓரிலக்கத்துப் பதினோராயிரம் கோடி)

O இந்தியாவின் மக்கள் தொகை 73 கோடி என்று வைத்துக் கொண்டால் தலைக்கு உருபா 1400 கடனாகிறது.

5 பேர் உள்ள குடும்பம் ஒன்றுக்குக் கடன்-சுமை அளவு — 7000 உருபா.

O வெளிநாட்டுக் கடன் முறைகள்:

1) உலக வைப்பகக் கடன்.
2) I.D.A. (International Development Association)
3) பிற நாடுகளிலிருந்து பெற்றுள்ள வட்டியில்லாத கடன்.

O **ஏழ்மை நாடு:** ஆண்டுக்குத் தனி ஆள் வருமானம 410 டாலர்களுக்குக் குறைவாக இருந்தால், அது ஏழை நாடு என்று உலக வைப்பகம் வரையறுத்திருக்கிறது.

இந்தியாவில் தனி ஆள் வருமானம் ஆண்டுக்கு 260 டாலர்.

அஃதாவது — உருபா. 3380

மாதத்திற்கு — 285 உருபா.

நாள் ஒன்றுக்கு — உருபா- 9.50

O இந்தியாவில் படைத்துறைச் செலவு
(ஆண்டுக்கு) 13,486.85 கோடி.

O இந்தியாவில் உள்ள கருப்புப் பணம்: 37,000 கோடி

சட்டங்கள்!

MISA: Maintenance of Internal Security Act (உள்நாட்டுப் பாதுகாப்புக் கடைப் பிடிப்புச் சட்டம்)

NSA: National Security Act. (தேசியப் பாதுகாப்புச் சட்டம்).

ESMA: Essencial Service Maintenance Act.) (முகாமைப் பணிகள் பாதுகாப்புச் சட்டம்.)

SCA : Special Courts Act. (சிறப்பு வழக்கு மன்றச் சட்டம்)

TDA : Terrorist and Disruptive Activities Prevention Act. (அஞ்சத்தக்க அழிவுச் செயல்கள் தடுப்புச் சட்டம்.)

—இவையெல்லாம் இந்தியாவையே ஒரு சிறைக் கூடமாக்கும் சட்டங்கள்.

போராளிகள் விடுவிப்பு!

தமிழக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, மதுரை நடுவண் சிறையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் காவலிலிருந்த இளங்கோ என்னும் போராளிக்குக் கடந்த 27-6-89 அன்று ஓராண்டுச் சிறை முடிந்தது. எனவே அவர் கடந்த 28-6-89 அன்று மதுரைச் சிறையிலிருந்து அறமன்றத்தால் தம் பொறுப்பில் விடுவிக்கப் பெற்றும் பிறர் போல் சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் வெளியே வந்துள்ளார்.

இளங்கோவுடன் மதுரை நடுவண் சிறையில் உள்ள **பொழிலனுக்கும், முகிலனுக்கும்** வரும் 31-8-89-உடன் ஓராண்டுச் சிறையிருப்பு முடிவடைகிறது. அவர்களும் சில கட்டுப்பாடுகளுடன், அன்றோ மறு நாளோ விடுதலை செய்யப் படலாம். (இவ்வோராண்டுக்காலத்தில் ஆசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தம் மகன் பொழிலனையோ பிறரையோ சிறையில் சென்று பார்க்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்குக் காரணம் பெருஞ்சித்திரனார் அவர்களின் தூண்டுதலின் பேரில்தான் அவர்கள் அனைவரும் மேற்கண்ட குண்டு வெடிப்புச் செயலில் ஈடுபட்டார்கள் என்று காவல் துறையின் குற்றச்சாட்டு உள்ளது. போராளிகளை ஆசிரியர் பார்ப்பதனால், அவர்களுக்கு வேறு ஏதாவது புதுத் தொல்லைகள், புதுக் குற்றச்சாட்டுகள் வந்து விடக் கூடாது என்பதொன்று. அடுத்து ஆசிரியர் தம் மகன் என்ற முறையிலும் பொழிலனைப் போயப் பார்க்காமல் இருந்தது, போராளிகள் பிறரைப் போய்ப் பார்க்காத பொழுது அவரை மட்டும் அவ்வாறு பார்ப்பது என்பது இரண்டாவது)

எனவே, அடுத்து வரும் 31-8-89 அன்று மதுரைச் சிறையிலிருந்து தேசியப் பாதுகாப்புத் தடைச் சட்டக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பெற்று வரவிருக்கும் போராளிகள் பொழிலனையும், முகிலனையும் ஆசிரியர் நேரே சென்று வரவேற்பார். அக்கால் ஆசிரியருடன் சென்று போராளிகளை வரவேற்க விரும்புவார் வரலாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறது. O

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 126.

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!

சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!

இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!

தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!

மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!

பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!

எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 43

கட்சித் தலைவர் ஆட்சித் தலைவராக வரும் பொழுது, கட்சிப் பார்வை அவருக்கு வே கூடாது; இல்லெனில் நல்ல ஆட்சி அவரால் தர முடியாது.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5, அருணாசலத் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர் :

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்:

திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,

அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657